

நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (17.12.2025) தலைமைச் செயலகத்தில் 2025–2026 ஆம் ஆண்டிற்கான புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 28 சட்டத்துறை தன்னார்வ பயிற்சியாளர்களுக்கு (Law Interns) பயிற்சிக்கான நியமன ஆணைகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரசு செயலாளர் சி. ஜார்ஜ் அலெக்சாண்டர், கூடுதல் செயலாளர்கள் முனைவர் கு.மகேஷ் குமார், ப. அன்புச் சோழன் மற்றும் சட்டத் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ‘பாரத்நெட்’ திட்டத்தில் ரூ. 40,000 கோடியை விரயமாக்கிய ஒன்றிய அரசு!

## ‘இது நிர்வாகத்தோல்வி அல்ல – ஊழல்’ – ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம்!



புதுடெல்லி, டிச.19-

இந்தியா முழுவதும் அனைத்து கிராமங்களுக்கும் அதிவேக இணைய சேவை வழங்கும் நோக்கில், 2011-ல் தொடங்கப்பட்ட National Optical Fibre Network (NOFN) திட்டத்தை 2015-ம் ஆண்டு ‘பாரத்நெட்’ என்று பெயர் மாற்றி ஒன்றிய அரசு செயல்படுத்தியது. தற்போது 10 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில், இத்திட்டத்தின் நிலை என்ன என்று ஒன்றிய தொலைத்தொடர்பு அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு கிடைத்துள்ள பதில்களின் மூலம், மக்கள் வரிப்பணம் சுமார் ரூ. 40000 கோடியை ஒன்றிய அரசு விழுங்கி ஏப்பம் விட்டுள்ளது அம்பலமாகியுள்ளது.

Phase 1 & 2 தோல்வி; சுமார் ரூ. 40000 கோடி விரயம்:

பாரத்நெட் திட்டத்தில் Phase 1 மற்றும் Phase 2 முடிவடைந்து, சுமார் 2.14 லட்சம் கிராம ஊராட்சிகள் சேவைக் குத் தயார் நிலையில் இருப்பதாக ஒன்றிய அரசு கூறியுள்ளது. இதற்காக இதுவரை சுமார் ரூ. 40000 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் இந்த ‘தயார் நிலை’ என்ற அறிவிப்பு அப்பட்டமான பொய். இதைஒன்றிய அரசே தன்னுடைய அடுத்தக்கட்ட பதிலில் ஒப்புக் கொண்டுள்ளது. ஃபைபர் கட்டமைப்பில் Linear Structure முறையை கையாண்டதால் இணைய சேவைதர மற்றதாகி விட்டது (unreliable) எனக்கூறியுள்ளது.

இரண்டு கேள்விகள் எழுகின்றன. 1) இந்த Linear Structure முறைபத்தாண்டுகளுக்கு முன்பே உலகம் முழுக்க மிகப்பழையது என்று ஒதுக்கப்பட்ட நிலையில், ஏன் இதை இத்தனை ஆண்டுகளும் பயன்படுத்த வேண்டும்? 2) இந்த முட்டாள் தனத்திற்கு செலவழித்து விரயமாக்கப்பட்ட ரூ.40000 கோடிக்கு என்ன பதில்?

தொழில்நுட்ப வார்த்தைகளைக் கூறி ஒன்றிய அரசு தப்ப முடியாது. இந்த 40000 கோடி ஊழல் கணக்கிலேயே சேரும்.

Phase 3-க்காக 1.40 லட்சம் கோடி; அடுத்தகட்ட மெகா ஊழலுக்கான திட்டம்:

ஏற்கனவே செய்த தவற்றை சரி செய்வதாகக் கூறி, இப்போது Phase 3 என்ற பெயரில் மீண்டும் ரூ. 1.39 லட்சம் கோடி நிதியை ஒன்றிய அரசு செலவிட உள்ளது. இதில், Linear structure-க்கு பதிலாக, Ring architecture முறையை கையாள இருக்கிறார்கள்.

இதில் மிகப்பெரிய பிரச்சனை, இந்தப் பணிகளை மொத்தமாக கையாளும் SIA (Single Implement Agency)-யாக மீண்டும் BSNL-யே நியமிக்கப்பட்டிருப்பது. இந்த BSNL தான் முந்தைய இரண்டு கட்டங்களிலும் ஊழல் செய்து சொதப்பியிருப்பது. இது தொடர்பாக எந்த விசாரணையும் நடத்தாமல், நிறுவனத்திற்குள்ளும் எந்த சீர்திருத்தமும் செய்யாமல் மீண்டும் BSNL-க்கே பொறுப்பைக் கொடுத்துள்ளது.

இதன் மூலம், ஒன்றிய அரசு சொல்வது ஒன்றுதான்... “இந்த 1.39 லட்சம் கோடியையும் கொள்ளையடித்து தின்போம்”.

பாரத்நெட் இந்திய கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மாற்றப்போகும் அதி முக்கிய திட்டம். அதில் இப்படி ஒன்றிய அரசு ஊழல் கூத்து நடத்துவது ஏற்க முடியாதது. பின்வரும் இரண்டு நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தாக வேண்டும்.

1. கடந்த 10 ஆண்டுகளில் பாரத்நெட் திட்டத்தில் நடந்த ரூ.40000 கோடி ஊழல் பற்றி உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.

2. ரூ.1.40 லட்சம் கோடி மதிப்பிலான Phase 3 திட்டத்தைஊழலுக்கு காரணமான அதேBSNL நிர்வாகம் கையாள்வது மக்களுக்கு இழைக்கும் துரோகம். இது தொடர்பாக மாநிலங்களுடன் உரிய கலந்தாலோசனை செய்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தினார்.

### தமிழ்நாடு 52 சதவிகிதம் உயர்கல்வி வளர்ச்சியை எட்டி விட்டது!

# எங்களுக்கு எதற்கு புதிய கல்விக் கொள்கை? இந்தித் திணிப்பை எதிர்ப்போம்!

## மக்களவையில் – மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் பேச்சு!



புதுடெல்லி. டிச.19-

தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் மக்களவையில் பேசியதாவது:-

ஒன்றிய பிரதம அமைச்சர் அவர்கள் அமெரிக்காவுடன் தனிப்பட்ட முறையில் நட்புறவு இருக்கிறது என்று பெருமையோடு கூறிக் கொள்கிறார். அதனால் எந்த பலனும் இல்லை. அதனால்தான் அமெரிக்கா இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு அதிக வரிகளை விதித்து வருகிறார்கள்.

தமிழ்நாடு முதல்வர் அவர்களின் சீரிய பணியால் இன்றைக்கு தமிழ்நாடு கல்வியில் சிறந்த தமிழ்நாடாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் உயர் கல்வியில் அதிக மாணவர்கள் பயின்று வருகிறார்கள். புதிய கல்விக் கொள்கையில் நீங்கள் இலக்கு வைத்துள்ள 2034-ல் 52 சதவீதம் உயர் கல்வி வள ர்ச்சி என்பதை நாங்கள் இப்போதே எட்டி விட்டோம். எங்களுக்கு எதற்கு புதிய கல்விக் கொள்கை. மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிக்க முயற்சிப்பதை எதிர்க்கிறோம்.

சம்ரசிக்சான் அபியான் திட்டத்தின் கீழ் 2548 கோடியை கொடுக்க மறுப்பது எந்த விதத்தில் நியாயம். தமிழ்நாடு இந்தியாவில் தானே உள்ளது வேறு எந்த நாட்டிலும் இல்லையே. மன்றேகால் திட்டத்திற்கான நிதி நிலுவை தொகையை கூட நீங்கள் வழங்கவில்லை. அந்தத் திட்டத்திற்கான மகாத்மா காந்தி பெயரில் இருப்பதற்காகவே அதை மாற்ற நினைக்கிறீர்கள். சுதந்திர போராட்ட தலைவர்கள் மீதான வன்மத்தையே இது காட்டுகிறது. ஜல்ஜீவன் மிஷன் டு பேரிடர் காலத்திற்கான நிதியை எங்களுக்கு கொடுக்கவில்லை. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்றது முதல் வெள்ளம், புயல், கொரோனா, சென்னை பெருவெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தனது நிர்வாகத் திறமையால் சிறப்பாக அதை கையாண்டிருக்கிறார்.

எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் கல்வியும் மருத்துவமும் இரு கண்கள் என்று சொல்வார்கள். பெண்களுடைய முன்னேற்றத் திற்காகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி பாடுபட்டு வருகிறார். அதாவது புதுமைப்பெண்கள் திட்டம், தோழி விடுதி போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். பெண்களுக்கும். கல்விக்கும், மருத்துவத்திற்கும் செய்திருக்கிறார்கள். ஆனால் இதில் ஒன்றிய அரசின் பங்களிப்பு என்பது மிக குறைவாகவே இருக்கிறது.

ஒரு மாநிலத்தால் பெண்களுக்கும் கல்விக்கும் மருத்துவத்திற்கும் என இத்தனை திட்டங்களை கொடுக்க முடியும் என்றால் ஒன்றிய அரசால் ஏன் கொடுக்க முடியாது.

இவ்வாறு ராணி ஸ்ரீகுமார் பேசியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சங்ககிரி சி.வீரமணி
### டிசம்பர் 19 (2004)



மாணவப் பருவத்திலிருந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் தேர்வுக்குழு உறுப்பினர், சேலத்தில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இயக்குநர், பூமி தான வாரியத்தில் உறுப்பினர், தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1968ஆம் ஆண்டு சங்ககிரி இடைத்தேர்தலில் போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, சிறப்பாக மக்கள் நலப் பணியாற்றி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### நூறு நாள் வேலைத் திட்டப் பயனாளிகளின்

# பொருளாதார மேம்பாடு குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?

## மக்களவையில் — டி.ஆர்.பாலு வினா!



புதுடெல்லி, டிச. 19-

நூறு நாள் வேலைத் திட்டமான மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்துக்காக இதுவரை ஒன்றிய அரசு மாநில வாரியாக செய்த செலவு விவரங்கள் என்ன.? இந்த திட்டத்தின் விளைவாக ஊரகப் பகுதி பயனாளிகளின் பொருளாதார மேம்பாடு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டனவா? அப்படியானால் அவற்றின் விவரங்கள் என்ன என்று நாடாளுமன்ற மக்களவையில் திமுக மக்களவைக் குழுவின் தலைவரான டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பி இருந்தார். இதற்கு 16.12.2025 அன்று கேள்வி நேரத்தில் எழுத்து பூர்வமாக ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சர் அளித்த பதில் வருமாறு:

திட்டம் தொடங்கிய 2006-07 முதல் 11.12.2025 வரை அனைத்து மாநிலங்களிலும் சேர்த்து மொத்தம் பத்து லட்சத்து அறுபதினாயிரத்து அறுநூற்று எழுபத்தி நான்கு (10,60,674) கோடி ருபாய் செலவிடப் பட்டுள்ளது. மேலும், சென்ற ஆறு ஆண்டுகளில் சராசரியாக நாடு முழுவதும் ஆண்டு ஒன்றுக்கு 302 கோடி மனித நாட்கள் அளவுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தினால் பயனாளிகளின் குடும்ப வருவாய், வறுமைநிலைக் குறைபபு பற்றிய ஆய்வு ஒன்றிய அரசின் நீத்தி ஆயோக் கின் வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலகம் வாயிலாக மேற்கொள்ளப் பட்டது. மூன்றாம் தரப்பு ஆய்வாக செய்யப்பட்ட இந்த ஆய்வில் முடிவில் ஊரகப்பகுதிகளில் நிலையான சொத்துக்கள், மேம்படுத்தப் பட்ட நீர் வளம், மண்வளப் பாதுகாப்பு மற்றும் கூடுதல் விளைச்சல் போன்ற பயன்கள் உருவாக்கப்பட்டதன் விளைவாக ஊரக வறிய மக்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப் பட்டுள்ளதாக கண்டறிய ப் பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய ஊரக வளர்ச்சிக்கான இணை அமைச்சர் கமலேஷ் பஸ்வான் அவர்கள் தனது பதிலில் தெரிவித்தார்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம் – குடிமங்கலம் வடக்கு

# ஒன்றியச் செயலாளர் அனிக்கடவு ச.கிரி மறைவு!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி அஞ்சலி செலுத்தினார்!



திருப்பூர், டிச. 19-

திருப்பூர் தெற்கு மாவட்டம் குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அனிக்கடவு ச.கிரி (வயது 53) இவர் நேற்று (18.12.2025 -வியாழக்கிழமை) அதிகாலை 12.30 மணியளவில் மாரடைப்பால் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்ததும் மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி உள்பட மாவட்ட, நகர, ஒன்றிய, வட்ட கழக, கிளை கழக நிர்வாகிகள் பலர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அயராத உழைப்பும், அளவறியாத அன்பும், அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்கும், ஈடில்லா நேசமும், திராவிடக் கொள்கையை சுவாசித்த பெருமகனார் அனிக்கடவு ச.கிரி அவர்களுக்கு கவிதா என்ற மனைவியும், மாளவிகா, திருநேத்ரா என்ற இரு மகள்கள் உள்ளனர். மாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டு அனிக்கடவு இடுகாட்டில் உடல் எரியூட்டப் பட்டது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர்

# வி.எஸ். ராமகிருஷ்ணன் சகோதரர் மனைவி மரகதம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



காஞ்சிபுரம் டிச.19 –

மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி. எஸ். ராமகிருஷ்ணன் சகோதரர் சங்குபாணி மனைவி மரகதம் உடல்நலக்குறைவினால் நேற்று முன்தினம் (17.12.2025 – புதன் கிழமை( காலை 11 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்தும் கழகத்தினர் மற்றும் உறவினர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அம்மையாரின் இறுதி ஊர்வலம் நேற்று (18.12.2025) பிற்பகல் 2 மணியளவில் பெரிய காஞ்சிபுரம் வைகுண்டபுரம் தெருவில் உள்ள இல்லத்திலிருந்து புறப்பட்டு தாயார்குளம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் “தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (வேலூர்) தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்” (பதிவு எண் 820/NAT , பேரவை இணைப்பு எண். 405) பணிமனைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகிறது. தேர்தல் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**கலைஞரகம்**
சென்னை 17
நாள்: 17.12.2025

**(மு.சண்முகம், Ex. MP)**
பொதுச் செயலாளர்,
தொ.மு.ச. பேரவை



## தி.மு.க.
## இளைஞர் அணி

### மாவட்ட சமூக வலைதள துணை அமைப்பாளர்கள் நியமனம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

கழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் – தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தப் பொறுப்புகளுக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து 1,450–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அவர்களை நேரில் அழைத்து, இதுவரை ஆற்றிய களப்பணிகள் மற்றும் சமூக வலைதளப் பணிகளை ஆய்வு செய்தோம். அவற்றின் அடிப்படையிலும், மாவட்டக் கழகச் செயலாளர்களின் பரிந்துரையின் பேரிலும் இவர்கள் தேர்வுசெய்யப்படுகின்றனர்.

அந்த வகையில், இளைஞர் அணி மண்டலம் 1–க்கு உட்பட்ட கழக மாவட்டங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சமூக வலைதள மாவட்ட துணை அமைப்பாளர்களின் விவரம் வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | துணை அமைப்பாளர் [சமூக வலைதளம்] |
|---|---|---|
| 1 | சென்னை மேற்கு | மு.சிவசிதம்பரம், 16/18, பெரியார் பாதை, பாரதி தெரு, சூளைமேடு, சென்னை - 94 |
| 2 | சென்னை தெற்கு | வி.சண்முகநாதன், 35, கென்னடி தெரு, டி.பி. நகர், தரமணி, சென்னை - 113 |
| 3 | சென்னை வடக்கு | வெ.சு.சத்தியநாராயணன், 36/4–ஏ, தாண்டவராயன் கிராமணி தெரு, தண்டையார்பேட்டை, சென்னை - 81 |
| 4 | சென்னை கிழக்கு | அ.ராக்கிப் ஹுசைன், 5, சுல்தான் தெரு, மண்ணடி, துறைமுகம், சென்னை - 1 |
| 5 | சென்னை வடகிழக்கு | வீ.மணிகண்டன், 3/90, கருமாரி அம்மன் கோயில் தெரு, சின்னமாத்தூர், மாத்தூர், சென்னை - 68 |
| 6 | சென்னை தென்மேற்கு | க.அருண்குமார், 33/15, 3வது அவென்யூ, அசோக் நகர், சென்னை - 83 |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 17-12-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி